# டோஸ்-பேக் செய்யப்பட்ட மருந்து

மருந்தகத்தில் இருந்து உங்கள் டோஸ் பேக் செய்யப்பட்ட மருந்தைப் பெறவும்.

பல மருந்துகளை உட்கொள்பவர்களுக்கு இது எளிதான மற்றும் பாதுகாப்பான தீர்வாகும்.

DANSKE REGIONER apotek KL medcom

## டோஸ்-பேக் செய்யப்பட்ட மருந்து என்றால் **என்ன**?

டோஸ்-பேக் செய்யப்பட்ட மருந்து என்றால் மருந்தகம் உங்கள் மருந்தை சிறிய டோஸ் பாக்கெட்களில் பேக் செய்வதைக் குறிக்கின்றது. ஒவ்வொரு டோஸ் பாக்கெட்டும் குறிப்பிட்ட நேரங்களில், உதாரணமாக, காலை மருந்து, நண்பகல் மருந்து, மாலை மருந்து மற்றும் இரவு மருந்து என நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டிய மருந்தைக் கொண்டுள்ளது.

டோஸ் பாக்கெட்டுகள் ஒரு சமயத்தில் 14 ஒற்றைச் சுருள்களாக வழங்கப்படுகின்றன. டோஸ் பாக்கெட்டுகள் கிழித்து எடுப்பதற்கான கோட்டின் மூலம் பிரிக்கப்படுகின்றன, எனவே நீங்கள் உங்கள் மருந்தை எடுக்க வேண்டிய ஒவ்வொரு முறையும் சுருளில் ஒரு டோஸ் பாக்கெட்டை எளிதாகக் கிழித்து எடுக்க முடிகின்றது.

## சொல்யூஷனில் **என்னென்ன** மருந்துகளைச் சேர்க்க முடியும்?

உங்கள் மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்ட மருந்தை டோஸ் பேக் செய்ய முடியுமா என மருந்தகம் மதிப்பிடுகின்றது. மாத்திரைகளையும் காப்ஸ்யூல்களையும் மட்டுமே டோஸ் பேக் செய்ய முடியும்.

## டோஸ்-பேக் செய்யப்பட்ட மருந்தின் நன்மைகள்

- எந்த மருந்தை, எப்போது எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- மருந்து உட்கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் நினைவு வைத்திருக்கிறீர்களா என்பதை எளிதாகச் சரிபார்க்கலாம்.
- உங்களுக்குத் தேவையான மருந்தை மட்டுமே பெறுகிறீர்கள் மற்றும் அதற்கு மட்டுமே பணம் செலுத்துகிறீர்கள்.
- மருந்து மீதமாகி விட்டது என்ற கவலை உங்களுக்கு இல்லை.
- சொல்யூஷன் சுகாதாரமானதாக உள்ளது, பாக்கெட்டுகளை எளிதாகத் திறக்க முடிகின்றது மற்றும் அவற்றை உங்கள் பையில் வைத்துக் கொண்டுவருவதும் எளிது.

**உங்கள் மருந்தை எடுத்துக்கொள்ள உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் மற்றும் உங்கள் மருந்து பொருத்தமானதாக இருப்பதாக உங்கள் மருத்துவர் தீர்மானித்தால், டோஸ்-பேக் செய்யப்பட்ட மருந்து ஒரு சிறந்த மற்றும் பாதுகாப்பான விருப்புரிமையாக உள்ளது.**

## நடைமுறையில் அது எப்படி வேலை செய்கின்றது?

உங்கள் மருந்தை டோஸ்-பேக் செய்து பெற்றுக்கொள்ளலாமா எனப் பார்க்க உங்கள் மருத்துவர், மருந்தாளுநர் அல்லது நகராட்சிப் பணியாளரைக் கலந்தாலோசிக்கவும்.

உங்களுக்கு முதன்முறையாக டோஸ்-பேக் செய்யப்பட்ட மருந்து கொடுக்கப்படும்போது, சுருளில் உள்ள மருந்தின் சுருக்கத் தொகுப்பையும் நீங்கள் பெறுவீர்கள். இந்தச் சுருக்கத் தொகுப்பு டோஸ் விளக்க அட்டவணை எனப்படுகின்றது.

உங்கள் மருத்துவரோ அல்லது மருத்துவமனையோ உங்கள் மருந்தை மாற்றினால், புதிய மருந்துச் சுருளுடன் புதிய விளக்க அட்டவணையைப் பெறுவீர்கள்.

**டோஸ் பேக்கேஜிங் செய்யப் பொருந்தாத மருந்து உங்களுக்குக் கொடுக்கப்பட்டால், உங்கள் டோஸ்-பேக் செய்யப்பட்ட மருந்துடன் சேர்த்து அந்த மருந்து தனியான பேக்கேஜிங்கில் உங்களுக்குக் கொடுக்கப்படும்.**

**உங்கள் மருந்தை எடுத்துக்கொள்ள உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், உங்களுக்குத் தேவையான மருந்தைப் பெறுவதை நகராட்சிப் பணியாளர் உறுதி செய்வார்.**

## பயனர்கள் என்ன சொல்கின்றனர்

*"எனது மாத்திரைகள் ஒரு பாக்கெட்டில் இருப்பது எனக்கு நம்பிக்கை அளிக்கின்றது.*
*அந்த வகையில் நான் சரியான பொருளை, அதாவது, எனக்குத் தேவையானதைப் பெறுகிறேன் என்பதை அறிவேன்."*

*"யாருடைய உதவியும் இன்றி நானே அதைச் செய்ய முடியும் என்பது — எனக்குப் பெரிதும் உதவியாக உள்ளது."*

*"இதைக் கையாளுவது எனக்கு மிக எளிதாக இருப்பதாக நினைக்கிறேன். அந்தச் சுருள்கள் மிக எளிதானவையாக உள்ளன . அது எனக்குச் சுதந்திரம் அளிக்கிறது மற்றும் சிறப்பாகச் செயல்படுகின்றது. எனக்கு உதவி செய்ய யாராவது வரட்டும் என்று அமர்ந்து காத்திருக்கத் தேவையில்லை".*

## நான் எனது மருந்தை எங்கு வாங்கலாம்?

இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை உங்கள் டோஸ்-பேக் செய்யப்பட்ட புதிய மருந்துச் சுருளை மருந்தகத்தில் வாங்கிக்கொள்ளலாம்.

உடல்நலப் பிரச்சனைகள் காரணமாக மருந்தை வாங்குவதற்கு உங்களால் வர முடியாவிட்டால், மருந்தை உங்களுக்கு நேரடியாக விநியோகிக்குமாறு மருந்தாளுநரிடம் கேட்கவும், அதற்கென விநியோகக் கட்டணம் செலுத்த வேண்டும்.

## டோஸ்-பேக் செய்யப்பட்ட மருந்தின் விலை என்ன?

உங்கள் மருந்தை டோஸ்-பேக் செய்வதற்கு நீங்கள் கட்டணம் செலுத்த வேண்டும். அதோடு, மருந்துக்கான கட்டணத்தையும் நீங்கள் செலுத்த வேண்டும்.

நீங்கள் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மானிய மருந்துகளைப் பெற்றால், பொதுவாக கட்டணத்தில் 85% மானியமாகக் கிடைக்கும். அதோடு, உங்களுக்கு நாளொன்றுக்கு சுமார் 1 DKK கூடுதலாகச் செலவாகும்.

**பின்வரும் நிகழ்வுகளில் கட்டணம் குறைக்கப்படலாம் அல்லது முற்றிலும் தள்ளுபடி செய்யப்படலாம்:**

- நீங்கள் நகராட்சியின் சுகாதார மானியம் பெறுபவராக இருந்தால்.
- நீங்கள் டென்மார்க் சுகாதாரக் காப்பீட்டின் உறுப்பினராக இருந்தால்.

**டோஸ்-பேக் செய்யப்பட்ட மருந்து உங்களுக்கு மலிவானதாக இருக்கலாம், ஏனெனில்:**

- மருந்துகளுக்கு மிக மலிவான யூனிட் விலை செலுத்தப்பட்டுள்ளது.
- மாற்றங்கள் தொடர்பாக மருந்து வீணாவது குறைவாக உள்ளது.

**https://app.apoteket.dk/prisberegner-dosispakket-medicin**-இல் உங்கள் விலையைக் கணக்கிடவும்.

மானியங்களுக்கான விதிகள் குறித்த கூடுதல் தகவல்களை அறிந்துகொள்ள அல்லது வழிகாட்டுதலுக்கு, உங்கள் மருந்தாளுநரிடம் பேசவும் அல்லது apoteket.dk/medicintilskud-இல் கூடுதல் விவரங்களைப் படித்துத் தெரிந்துகொள்ளவும்.

DANSKE REGIONER apotek KL medcom

*டோஸ்-பேக் செய்யப்பட்ட மருந்தை விளம்பரப்படுத்துவதற்கான பலதுறைப் பணிக் குழுவால் தயாரிக்கப்பட்டது. டோஸ்-பேக் செய்யப்பட்ட மருந்தை தேசிய அளவில் விளம்பரப்படுத்துவதற்கான நிகழ்ச்சி வழிகாட்டல் குழுவால் மார்ச் 2024-இல் அனுமதிக்கப்பட்டது.*